Process Safety Beacon
Messages for Manufacturing Personnel
www.aiche.org/ccps/process-safety-beacon

This issue sponsored by
CCPS An AIChE Technology Alliance
Center for Chemical Process Safety
aiche.org/ccps
DEKRA
www.dekra.us/process-safety

September 2024

# நீங்கள் தயாராகுறீர்களா??



Figure 1. ஒரு மாவீரன் போருக்கு ஆயத்தமாகிறான்



Figure 2. ஒரு தொழிலாளி ஷிப்டைத் தொடங்கத் தயாராகிறான்

கி.பி 1500 ஆண்டுகளில் போருக்குத் தயாராகும் போர்வீரர்களின் திரைப்படங்களைப் பார்த்திருப்போம். அவர்கள் தங்கள் வாள்களை கூர்மைப்படுத்துவார்கள் , கேடயங்களைச் சோதிப்பார்கள் , கவசங்கள் மற்றும் தலைக்கவசங்களை அணிவார்கள். தலைவர்கள் அடுத்தடுத்த மோதலுக்கான திட்டங்களின் மாதிரிகளை விளக்குவார்கள் . மேலும் அவர்கள் அனைவரும் தங்கள் இடங்களுக்குச் சென்று போரின் தொடக்கத்திற்காக காத்திருப்பார்கள் . சில திரைப்படங்களில் சிப்பாய்கள், சாத்தியமான காயங்கள் அல்லது அதைவிட மோசமாக நடக்கலாம் என்று நினைப்பதையும் பார்த்து இருக்கிறோம். அவ்வாறாக , அவர்கள் அன்றைய சவால்களை எதிர் நோக்க தயார் படுத்திக் கொள்வார்கள்.

**உங்கள் நாளைத் தொடங்க நீங்கள் தயாராகுறீர்களா?**

ஒரு ஷிஃப்ட்டின் தொடக்கத்தில், தொழிலாளர்கள் தங்கள் PPE -பாதுகாப்பு கண்ணாடி, தீ-தடுப்பு ஆடைகள், பூட்ஸ் மற்றும் ஹெல்மட்டை அணிந்து கொள்வார்கள். ஒரு மீட்டர் அல்லது பெர்சனல் கேஸ் மானிட்டரை காலிப்ரேட் செய்வதும் அவசியமாக இருக்கலாம். யூனிட் தலைவர்களால் , உற்பத்தி அட்டவணை மற்றும் ஆய்வுப் பணிகள் கோடிட்டுக் காட்டப்பட்டு , அவைகள் ஷிஃப்ட் மாற்ற கலந்துரையாடல் மற்றும் ஷிப்ட் துவக்க கூட்டங்களின் போது, , தொழிலாளர்களுக்குத் தெரிவிக்கப்படுகின்றன.

செயல்முறை மற்றும் உபகரணங்களின் ஆபத்துகள் எதிரியைப் போன்று ஆபத்தானவை, அவற்றைக் கட்டுப்படுத்துவதே தினமும் பணியின் போராட்டமாகும் . ஒவ்வொரு நாளும், ஃபீல்ட் ரௌண்ட்ஸ் மற்றும் , கள ஆய்வின் போதும், பழுதடைந்த அல்லது செயலிழந்த உபகரணங்கள் மற்றும் சாதனங்களை சரிசெய்யும் போதும், நாம் ஒவ்வொருவரும் , போர்வீரர்களைப் போலவே நமது வேலைகளை தீவிரமாக எடுத்துக்கொள்ள வேண்டும் ? மேலும் ,நீங்கள் PPE-க்களை அணியும்போது , இன்று நீங்கள் எதிர்கொள்ளும் ஆபத்துக்களை பற்றியும் சிந்திக்க வேண்டும்.?

## உங்களுக்கு தெரியுமா?

- ஒவ்வொரு பாதுகாப்பான மற்றும் வெற்றிகரமான வேலை நாளிலும் திட்டமிடுதல் என்பது முக்கியமானதாகும்.
- ஷிஃப்ட் முடிந்து செல்லும் பணியாளர்கள் , புதிய ஷிஃப்ட் துவங்குபவர்களுடன் நேருக்கு நேர் கலந்துரையாடல் மேற்கொள்ளுதலே சிறந்த ஷிப்ட் ரிலீவிங்காகும்.
- சிறந்த ஷிப்ட் ரிலீவிங் கீழ்காணும் விவரங்களை கொண்டிருக்க வேண்டும்:
  - ஒவ்வொரு செயல்முறையின் தற்போதைய நிலை
  - ஏதேனும் குழப்பங்கள் அல்லது உற்பத்தி சிக்கல்கள் ஏற்பட்டனவா?
  - பராமரிப்புக்காக செயல்படாத உபகரணங்கள்
  - பை- பாஸ் செய்யப்பட அல்லது ஆஃப்லைனில் உள்ள உபகரணங்கள் அல்லது கண்ட்ரோல்
  - எந்த ஒப்பந்ததாரர் பணியில் தொடர்கிறார்கள்
  - அடுத்த ஷிப்டில் தொடருகின்ற அனுமதிக்கப்பட்ட பணிகள்
  - மற்ற பகுதிகளில் இருந்து, தற்போது பணியிலுள்ள பார்வையாளர்கள் அல்லது தொழிலாளர்கள்,
  - யூனிட்டின் லாஃக் புத்தகத்தை விவரித்தல்
- சில நேரங்களில் , முழுமையாகப் புரிந்துகொள்ள பணியிடத்திற்கே செல்ல வேண்டிய அவசியம் கூட ஏற்படலாம்
- சில நிறுவனங்கள் ஷிப்ட் ரிலீவிங்கில் சரிபார்ப்புப் பட்டியல் அல்லது படிவத்தைப் பயன்படுத்துகின்றன.

## நீங்கள் என்ன செய்ய வேண்டும் ?

- கட்டுப்பாட்டு அறை அல்லது ஷிப்ட் மாற்றம் செய்யும் பகுதிக்கு, அனைத்து தகவல்களையும் விவரிக்க, சரியான நேரத்திற்குள் வர வேண்டும்.
- லாஃக் புத்தகத்தை கவனமாகப் படிக்கவும். உங்கள் பகுதியில் உள்ள பிரச்சினைகளை மட்டும் பார்ப்பதைத் தவிர்த்து , முழு பகுதி அல்லது யூனிட்டின் நிலையைப் புரிந்து கொள்ளுங்கள்
- அனைத்து சிக்கல்களைச் அறிந்து கொள்ள, ஷிஃப்ட் மாற்றம் சார்ந்த படிவங்களை மற்றும் நடைமுறைகளை பின்பற்றவும்.
- நடப்பு செயல்முறையின் தற்போதைய நிலையை நன்கு புரிந்து கொள்ள கேள்விகளைக் கேளுங்கள்.
- ஷிப்ட் மாற்றக் கலந்துரையாடல்களில் தீவிரமாகப் பங்கேற்கவும். இது உங்கள் பாதுகாப்புக்கு முக்கியமானதாகும் என்பதை நினைவில் வையுங்கள்.
- அடுத்த ஷிப்டுக்கான பெர்மிட்டுகளை மீண்டும் வழங்க வேண்டி இருந்தால் , பெர்மிட்டை அங்கீகரிக்கும் முன் , அந்த பகுதியைப் பூரணமாக ஆய்வு செய்யுங்கள், பணியிட நிலைமைகள் மாறியிருக்கக் கூடும்.

**வரவிருக்கும் சவால்களுக்கு தயாராக உங்கள் நாளைத் தொடங்குங்கள்!!**

©AIChE 2024. All rights reserved. Reproduction for non-commercial, educational purposes is encouraged. However, reproduction for any commercial purpose without express written consent of AIChE is strictly prohibited. Contact us at ccps_beacon@aiche.org or +1 646-495-1371.